## செய்யுள் – மலைபடுகடாம்

1.ஆற்றுப்படை என்றால் என்ன?

ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர் வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம். நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ஆற்றுப்படை.

2.மலைபடுகடாம் – நூல்குறிப்பு தருக.

- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.
- அடிகள் – 583
- வேறு பெயர் – கூத்தராற்றுப்படை
- பெயர்க்காரணம் – மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் இப்பெயர் பெற்றது.
- பாட்டுடைத் தலைவர் – நன்னன் என்னும் குறுநில மன்னன்.
- ஆசிரியர் – இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.

3. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது? (அல்லது)
மலைவாழ் மக்களின் விருந்தோம்பல் பண்பை மலைபடுகடாம் எவ்வாறு கூறுகிறது?(அல்லது)
மலைபடுகடாம் வழிநின்று பெருங்கௌசிகனார் கூறுவனவற்றை எழுதுக.

நன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரை வழிப்படுத்துதல்.

- ❖ பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்.
- ❖ இரவில் சேர்ந்து தங்குங்கள்.
- ❖ நெருப்பு போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள்.

- சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்களை உடைய பாதையில் செல்லுங்கள்.
- மூங்கில்கள் ஓசை எழுப்பும் மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.
- அங்குள்ளவர்களிடம், 'பகைவரைப் பொறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள்! என்று சொல்லுங்கள்.
- அதன் பிறகு நீங்கள் உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்களுடைய வீட்டுக்குள் உரிமையுடன் நுழையுங்கள். உறவினர் போலவே அவர்கள் உங்களுடன் பழகுவர்.
- நீண்ட வழியைக் கடந்து வந்த உங்களின் துன்பம் தீர இனிய சொற்களைக் கூறுவர்.
- அங்கே, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச்சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்.